**இரண்டாவது பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர் சென்னை 8**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்- 8763 /2022

பல்வகை

முதன்னை பதிவேடு

அமர்வு

அரசு தரப்பு சாட்சி. 4 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரிஸ்வான் | வட்டம் | |
| த/பெ | ஆசாத் | சாதி | |
| வயது | 30/2024 | அழைத்தல் | |
| தொழில் | Hardware தொழில் | மதம் | |
| விலாசம் | எண் -13/3, புல்லாதோட்டம், 5 வது தெரு, பூந்தமல்லி, சென்னை -56 | | |

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ஆம் நாளன்று 1969 ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. (குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்கண்ட முகவரில் வசித்து வருகிறேன். நான் தற்போது Hardware தொழில் செய்து வருகிறேன். கடந்த 18.06.2022 அன்று எழும்பூரில் எனது தம்பி வினோபிரசாத் ஐ ஊருக்கு அனுப்பதற்காக வந்திருந்தேன். அப்போது மணி 11.30 இருக்கும். அப்போது கொங்குரெட்டி கீழ்பாலத்திற்கு பக்கத்தில் கூட்டமாக இருந்தது. நாங்கள் இருவரும் வண்டியை நிறுத்திவிட்டு பார்த்தோம். அங்கு போலீசார் ஒரு பிடித்து வைத்துகொண்டு விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். அங்கு கடந்த 11.06.2022 அன்று இரவு நேரத்தில் அந்த நபர் ஒரு பெண்ணிடம தவறான முறையில் நடந்ததாக சொல்லி போலீசார் பேசிக்கொண்டார்கள். அதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள் நாங்கள் சம்மதித்தோம். தற்போது வழக்கு கோப்பில் உள்ள எதிரியின் புகைப்படத்தை பார்த்து சாட்சி இவரை தான் அன்றைய தினம போலிசார் விசாரித்து கொண்டிருந்ததாக சொல்கிறார். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த நபர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 வது கையெப்பம் என்னுடையது தான். அந்த கையெப்பம் மட்டும் **அசா.ஆ.**3 ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடைய தம்பி வினோபிரசாத் போட்ட கையெழுத்து ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் K. வேலவன் சாட்சியிடன் குறுக்கு விசாரணை தேவையில் இல்லைஎன்று கூறினார்.

சாட்சியின் கையொப்பம்

**2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ஆம் நாளன்று 1969 ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.**